**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 178/2024**
**வழக்கு சாட்சி PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரமசிவன் | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | வள்ளிக்கண்ணு | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | பூலான்குடியிருப்பு | வயது | : | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 29th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் பூலான்குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். சாட்சி திருமலையை எனக்கு தெரியும். அவர் எனது உறவினர் ஆவார். 09.03.2018 ம் தேதி, அதிகாலை 03.00 மணிக்கு நான் வீட்டில் படுத்திருந்த போது, எனது வீட்டு கதவை திருமலை காயத்துடன் வந்து தட்டினார். நான் கதவை திறந்து பார்த்தேன். அப்போது, அவர் மீது இரத்தக்கறை இருந்தது. அப்போது, அவர் யாரோ ஒரு நபர் என் வீட்டிலிருந்த ரூபாய் ஒன்றரை இலட்சத்தை யாரோ திருடி சென்று விட்டு, தன்னையும் கீழே தள்ளி விட்டு சென்று விட்டதாக கூறினார். என்னிடம் திருமலை சொல்லும் போதே மயக்கமாகி விழுந்து விட்டார். பின்னர், நான் அவரை ஆம்புலன்ஸ் மூலம் செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விட்டு, அவரது மகன் இசக்கிமுத்துவிற்கு போன் போட்டு தகவல் சொன்னேன். பின்னர், அவரை செங்கோட்டை அரசு மருத்துவமனையிலிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். நான்

புளியரை காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு என்னிடம் காட்டப்படுவது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். இந்த வழக்கு்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.30 19:35:30 +0530